**த. நா.ச.பே. எண் : 037** **நாள் : 25.06.2018**

**<u>இன்று (25.06.2018), மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜூ அவர்கள் சட்டமன்றத்தில், செய்தி மற்றும் விளம்பரத் துறையின் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது, திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர் திரு.வாகை சந்திரசேகர் அவர்களுக்கு அளித்த பதில்:</u>**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திரைப்படப் படப்பிடிப்பு பற்றி சொன்னார்கள். சாலைகளில் படப்பிடிப்பு நடத்துவதற்கு அனுமதி வழங்க ரூபாய் 3 ஆயிரமும், பல்வேறு கட்டடங்களில், பல்வேறு இடங்களில் நடத்துவதற்கு ரூபாய் 5 ஆயிரமும், எம்.ஜி.ஆர் திரைப்படக் கல்லூரியில் இருக்கின்ற அரங்கங்கள் மற்றும் சாலைகளில் படப்பிடிப்பு நடத்துவதற்கு ரூபாய் 8 ஆயிரமும் வசூலிக்கப்படுகின்றது. திரைப்பட உரிமையாளர்கள் சங்கம், திரைப்பட வர்த்தகர்கள் சங்கங்கள் எல்லாம் அந்தக் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று அரசுக்கு கோரிக்கை வைத்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையான நடைமுறையில் உள்ள சிக்கல்கள் மற்றும் திரைப்பட படப்பிடிப்புக்கு உண்டான விதிகளை தளர்த்துதல் போன்றன அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

கட்டண உயர்வை பொறுத்த அளவில், கட்டணத்தை உயர்த்தவில்லை, நீண்டகாலமாக இருந்த கட்டணத்தை சீரமைத்து, இன்றைக்கு Multiplex திரையரங்குகளில் குறைந்த கட்டணமாக 50 ரூபாயும், அதிக கட்டணமாக 150 ரூபாயாகவும், அதேபோல, மாநகராட்சியை பொறுத்தவரையில் ஏ.சி. திரையங்குகளில் குறைந்த கட்டணமாக 40 ரூபாயும், அதிக கட்டணமாக 100 ரூபாயும், கிராம ஊராட்சி பகுதிகளில் உள்ள திரையரங்குகளில் குறைந்த கட்டமாக 25 ரூபாயும், அதிக கட்டணமாக 75 ரூபாயும் உள்ளது. ஏ.சி. இல்லாத non-A/c திரையரங்குகளில் மாநகராட்சி பகுதிகளில் குறைந்த கட்டணமாக 30 ரூபாயும், அதிக கட்டணமாக 80 ரூபாயும், கிராம

ஊராட்சிகளில் உள்ள திரையரங்குகளில் குறைந்த கட்டமாக 20 ரூபாயும், அதிக கட்டணமாக 50 ரூபாயும் உள்ளது. இப்படி காலம் காலமாக முறைப்படுத்தப்படாத, சீரமைக்கப்படாமல் இருந்த கட்டணத்தை முறைப்படுத்தியிருக்கின்றோம். ஏற்கனவே இருந்த கட்டணத்தைவிட குறைந்த கட்டணத்தை நிர்ணயித்து. மக்கள் குறைந்த கட்டணத்தில் திரைப்படங்களை பார்ப்பதற்கு அரசு ஏற்பாடு செய்துள்ளது. இதை திரைப்பட உரிமையாளர்கள் சங்கம், திரைப்பட விநியோகஸ்தர்கள், திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கம் என அனைவரும் வரவேற்றுள்ளனர் என்ற தகவலை தெரிவித்துக் கொள்கிறேன். திரைப்படத் தயாரிப்பாளர்கள்கூட, 2, 3 நாட்களுக்கு முன்பு பத்திரிகையிலே தென்மாநிலங்களில், தமிழகத்தில்தான் திரையரங்கு கட்டணம் குறைவாக உள்ளது என்ற கருத்தை தெரிவித்திருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல, ரூபாய் 1000, ரூபாய் 500 என்று விற்கின்ற நிலை இப்பொழுது தமிழகத்தில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

------

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**